## சோழிங்கநல்லூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (54 MLD)

- சோழிங்கநல்லூர் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (54 MLD) திட்டம், ரூ.65.97 கோடிக்கு மதிப்பீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.
- இத்திட்டப்பணி, நாள் ஒன்றுக்கு 54 மில்லியன் லிட்டர் திறனுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் வடிவமைக்கப்பட்டு, தொடர் முறையிலான சுத்திகரிப்பு செய்யும் முறை (SBR – Sequential Batch Reactor) மூலம் சுத்திகரிக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கட்டுமானம், 10 வருடங்களுக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது.
- **ஒப்பந்தத்தின் விவரங்கள்** :

  இத்திட்டத்திற்கான ஒப்பந்தப் பணிகள் ரூ.13444.54 இலட்சத்திற்கு (கட்டுமானம் ரூ.6870.02 இலட்சம் மற்றும் இயக்கம் மற்றும் பராமரித்தல் 10 வருடங்களுக்கு ரூ.6574.52 இலட்சம் ) 30 மாதத்தில் பணி முடிக்க M/s DeeTech Project Pvt. Ltd., Chennai அவர்களுக்கு M/s.Khilari & P&C., அவர்களுடன் இணைந்து பணி ஆணை 03.03.2016 அன்று கொடுக்கப்பட்டது. இப்பணி 11.07.2016 அன்று தொடங்கப்பட்டு, பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
- **பணிகளின் தற்போதைய நிலை:**

1. தற்போது 89 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ளது.
2. இதுவரை இத்திட்டத்திற்கு ரூ. 6409.41 இலட்சம் நிதி செலவிடப்பட்டுள்ளது.
3. இத்திட்ட பணிகள் அனைத்தும் 30.09.2022க்குள் முடிக்கப்படும்.

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள
CHN_Metro_Water CMWSSB chennaimetrowater https://cmwssb.tn.gov.in